ந.க.எண்.509/2022/இ1

நகராட்சி அலுவலகம்,
கூடலூர்.
நாள்:– 26.06.2023

**<u>சாதாரண கூட்ட அழைப்பிதழ்</u>**

திருவள்ளுவர் ஆண்டு, சோபகிருது வருடம் ஆனி திங்கள் 15–ஆம் நாள் (ஜீன் மாதம் 30–ஆம் (நாள்:–30.06.2023) வெள்ளிக்கிழமையன்று காலை 10.35 மணியளவில் கூடலூர் நகராட்சி நகர்மன்றக்கூட்ட அரங்கில் நகர்மன்ற தலைவர் அவர்களின் தலைமையில் சாதாரணக்கூட்டம் நடைபெறவுள்ளது. அது சமயம் அக்கூட்டத்திற்கு நகர்மன்ற துணைத்தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

(ஓம்/–)லோ.பத்மாவதி
நகர்மன்றத்தலைவர்
கூடலூர் நகராட்சி

**பொருள்.1**

ஆணையாளர் அவர்களின் **05/2023** ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.472,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

நகராட்சி பொறியாளர் அவர்களின் **05/2023** ஆம் மாதந்திர நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:</u>**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.473,பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.3**

தேசிய வாழ்வாதார திட்டத்தின் கீழ் கூடலூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட இடங்களில் தகுதியான சாலையோர வியாபாரிகள் புதிய கணக்கெடுப்பு நடத்தப்பட்டு அடையாள அட்டை வழங்க நடவடிக்கை எடுக்கக் கோரி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20789/2021/UPA,நாள்.16.06.2022ன்படி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலை விகிதம் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.எண்.** | **ஒப்பந்தக்காரர் செய்யப்பட வேண்டிய பணிகள்** | **ஒப்பந்தக்காரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி கோரிய தொகை** |
|---|---|---|---|
| 1. | கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள அனைத்து சாலையோர வியாபாரிகளை பயோமெட்ரிக் முறையில் கணக்கெடுப்பு எடுத்தல் மற்றும் அவர்களுக்கு QR Code உடனான அடையான அட்டை (ID Card) தயாரித்து வழங்குதல், விற்பனை சான்றிதழ் (Certificate of Vendors) நகர தெரு விற்பனை திட்டம் (CSVP) விரிவான செயல்படுத்துதல் திட்டம் (DIP) மற்றும் MIS தரவுகளை 5 ஆண்டுகளுக்கு பராமரித்தல் | S.M.Alaguvel ( Read Trust) S/o Maharajan, Kaliankadu, Mannadimangalam, Madurai. | ரூ.650/– 1 நபருக்கு |
| 2. | | Dr.S.Arul Gnana Sekar (Good Hope Foundation), S/o S.Sanjeevi, No.23, Arulagam Jawahar Nagar, Thirumangalam Madurai | ரூ.600/– 1 நபருக்கு |

அலுவலகக்குறிப்பு : **1.** மேற்கண்ட பணிக்கு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் குறைவான விலை விகிதம் கோரிய (Good Hope Foundation) டாக்டர்.எஸ்.அருள் ஞான சேகர் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

**2.**அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.474,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.4**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**468** நாள் **26.05.2023** ஆம் தேதிய நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **16.06.2023** ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியின் வசம் குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஒப்படைப்பு செய்யப்பட்ட குடிநீர் திட்டத்தில் லோயர் கேம்பில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான குளோரின் கேஸ் சிலிண்டர்கள் விநியோகம் செய்தல் | 4.00 | Shri Sathya Dyes and Chemicals, Andipatti | 0.15% | – |
| | | | People Chemical Industries,Andipatti | – | 1.81% |

**அலுவலகக் குறிப்பு : –** 1. வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.15% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **Shri Sathya Dyes and Chemicals, Andipatti** அவர்களின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

2 . மேற்கண்ட குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.475,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.5**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**454**, நாள் **26.05.2023** ஆம் தேதிய நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **14.06.2023** ஆம் நாளன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலை விபரம் | விலைபுள்ளி தொகை | | |
|---|---|---|---|---|
| | | **STAR OFFICE SOLUTION UTHAMAPALAYAM** | **CI - CAMTECH CUMBUM** | **SHAZ COPIER CARE MADURAI** |
| 1. | கூடலூர் நகராட்சியில் அலுவலகத்தில் உள்ள ஒளி நகல் இயந்திரத்தினை (XEROX MACHINE RICHO MP 2001 L) தேவையான உதிரி பாகங்கள் பொருத்தி பராமரிப்பு பணிகள் செய்திடவும் மற்றும் தேவையான டோனர் விநியோகம் செய்திடவும் மற்றும் (**HP LASERJET PRINTER** MACHINE 1020 **& TVS DOT MATRIX**) பிரிண்டருக்கு தேவையான உதிரி பாகங்கள் பொருத்தி பராமரிப்பு பணிகள் | ரூ.44650/- | ரூ.46,750/- | ரூ.48,200/- |

| | | | | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | ரூ.44650/- | ரூ.46,750/- | ரூ.48,200/- |

**அலுவலகக் குறிப்பு : –**

1. வரப்பட்ட இரண்டு மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி விகிதம் கொடுத்துள்ள **STAR OFFICE SOLUTION,Uthamapalayam** அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.476,அங்கீகரிக்கப்பட்டது.**
**பொருள்.6**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்**.465** நாள் **26.05.2023** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **19.06.2023** ஆம் நாளன்று உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது**..**

| வ. எண். | பணியின் பெயர் | நிறுவனத்தாரின் பெயர் | விலைப்புள்ளியில் வழங்கும்படி கொடுத்துள்ள விலைவிகிதம் |
|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சியில் நகர் பகுதியில் உள்ள நீர்தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் விநியோகத்திற்காக உள்ள அனைத்து பகிர்மான குழாய்கள் மற்றும் பகிர்மான வால்வுகள் புதியதாக அமைத்து தினசரி அனைத்து பகுதிகளுக்கும் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்வதற்கு ஏற்றவாறு உரிய வரைபடங்கள், கருத்து வடிவமைப்பு தயார் செய்தல் , மற்றும் விரிவான திட்ட மதிப்பீடுகள் ஆகியவைகள் தயார் செய்து மூன்று பிரதிகளாகவும் மற்றும் (Hard & Soft Copies) வழங்கும் பணிக்கு | SMART Builders Veerpandi, Tirupur | 1.00% |
| | | KK Construction Mathur,Tiruppur | 1.2% |
| | | GRAND YART Construction Tiruchengode | 1.5% |

**அலுவலகக் குறிப்பு : –**

1. வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 1.00% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள SMART Builders Tirupur அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம் .
2. மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.477,அங்கீகரிக்கப்பட்டது**

**பொருள்.7**

இந்நகராட்சியில் கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு **37 DBC** களப்பணியாளர்கள் முற்றிலும் தற்காலிகமாக **Out Sourcing** முறையில் தேனி மாவட்டஆட்சியர் அவர்களின் செயல்முறை உத்திரவின்படி நிர்ணயிக்கப்பட்டுள்ள தினக்கூலியின் அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்க கொசுப்புழு ஒழிப்புபணிகளை மேற்கொண்டு வருகிறார்கள். இப்பணியினை ஒப்பந்த அடிப்படையில் **CLEAN CARE SERVICE CENTER** மதுரை நிறுவனத்தின் மூலம் தற்சமயம் செயல்பட்டு வருகிறது,தற்போது ஒப்பந்த நீட்டிப்பு முடிவதால், தற்போதைய சூழ்நிலையில நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை,அவர்களின் அறிவிறுத்தலின் படி மேற்கண்ட நிறுவனத்திற்கு மேலும் ஜீலை 2023 முதல் செப்டம்பர் 2023 முடிய மூன்று மாதங்களுக்கு நீட்டிப்பு செய்ய ஆகும் உத்தேச செலவீனம் தொகை ரூ.9,90,000/— க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:-**

பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் மற்றும் டெங்கு காய்ச்சல் தடுப்புபணிகளின்அவசரஅவசியம் கருதியும் நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று மேலும் ஜீலை 2023 முதல் செப்டம்பர் 2023 முடிய மூன்று மாதங்களுக்கு **CLEAN CARE SERVICE CENTER** மதுரை என்ற நிறுவனத்தின் மூலம் களப்பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். **(120/2021/எச்1)**

**தீர்மான எண்.478,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.8**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016 விதி 3(8) இன் கீழ் கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மத்திய, மாநில அரசு நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள், மாணவர் விடுதிகள், மால்கள் போன்ற நாளொன்றுக்கு சராசரியாக 100 கிலோவிற்கும் அதிகமான அளவுள்ள திடக்கழிவுகள் உருவாக்கக்கூடிய மொத்தக்கழிவுகளை உருவாக்குபவர்கள் (Bulk Waster Generators) நகராட்சி அலுவலகத்தில் பதிவு செய்யவும், குப்பைகளை மறு சுழற்சி செய்வதற்கு ஏற்ப உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த தெரிவிப்பது தொடர்பான அறிவிப்பு மாவட்ட செய்தி தொடர் அலுவலர் தேனி அவர்களின் மூலமாக தினசரி நாளிதழில் விளம்பரம் மேற்கொண்ட வகையில் ஆக செலவினம் ரூ.15271/—ஐ Express Publication (Madurai) Private Limited என்ற நிறுவனம் கேட்டுக்கொண்டதை தொடர்ந்து மேற்கண்ட செலவினத் தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்ட்ப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : —** மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.479,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.9**

கூடலூா் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**363** நாள் **27.02.2023** ஆம் தேதிய நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **16.06.2023** ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-3,4,5,6,10,12,மற்றும் 15 ஆகிய வார்டுகளில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பொது கழிப்பறைகளில் சிறு பழுதுகள் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 1.00 | திரு.எம்.சுருளி | 0.01% | – |
| | | | திரு.கே.சேகர் | – | 1.00% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.01% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.எம்.சுருளி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.480,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.10**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**362** நாள் **27.02.2023** ஆம் தேதிய நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **16.06.2023** ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது**.**

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் பழைய வார்டு எண்-8,புதிய வார்டு எண்-16, இராஜா கிணறு தெருவில் உள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் பொது கழிப்பறைகளில் மராமத்து பணி மேற்கொள்ளுதல் | 1.50 | திரு.எம்.சுருளி | 0.19% | – |
| | | | திரு.கே.சேகர் | – | 1.22% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.19% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.எம்.சுருளி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.481,அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள்.11

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**464**, நாள் **26.05.2023** ஆம் தேதிய நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **16.06.2023** ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள வார்டு எண்-13,கிராமச்சாவடி மற்றும் வார்டு எண் -19,கருணாநதி காலனி மற்றும் லோயர் கேம்பில் உள்ள மேல்நிலை நீர் தேக்கத்தொட்டிகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு உரிய வால்வுகளை இயக்குவதற்கும் , மேலும் இரவு மற்றும் பகல் நேரங்களில் காவல் பணி பார்பதற்கும் ஒப்பந்ததாரர் மூலம் ஆட்கள் பெற்று பணிகள் மேற்கொள்ள ஆட்கள் விநியோகம் செய்தல் | 4.80 | திரு.டி.சித்திரேசன் | 0.1% | – |
| | | | திரு.கே.சேகர் | – | 0.2% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.1% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.டி.சித்திரேசன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.482,அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள்.12

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**463**, நாள் **26.05.2023** ஆம் தேதிய நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **16.06.2023** ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி பகுதியில் அமைந்துள்ள வார்டு எண்-10,வாட்டர் டேங் தெருவில் அமைந்துள்ள தரை தள நீர் தேக்கத்தொட்டி , மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் வார்டு எண்-1, அரசமரம் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் இருந்து குடிநீர் விநியோகம் செய்வதற்கு உரிய வால்வுகளை இயக்குவதற்கும் , மேலும் இரவு மற்றும் பகல் நேரங்களில் காவல் பணி பார்பதற்கும் ஒப்பந்ததாரர் மூலம் ஆட்கள் பெற்று பணிகள் மேற்கொள்ள ஆட்கள் விநியோகம் செய்தல் | 4.80 | திரு.டி.சித்திரேசன் | 0.1% | – |
| | | | திரு.கே.சேகர் | – | 0.2% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.1% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.டி.சித்திரேசன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**தீர்மான எண்.483,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.13**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**471,** நாள் **26.05.2023** ஆம் தேதிய நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **16.06.2023** ஆம் நாளன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியின் வசம் குடிநீர் வடிகால் வாரியத்தினரால் ஒப்படைப்பு செய்யப்பட்ட குடிநீர் திட்டத்தில் லோயர் கேம்பில் உள்ள தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மின் மோட்டர்களை மற்றும் குடிநீர் வடிகாட்டி, | 4.80 | திரு.எம்.சுருளி | 0.02% | – |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குளோரினேசன் பணிகள் ஆகிய பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தாரர் மூலம் ஆட்கள் பெற்று செயல்படுத்த ஆட்கள் விநியோகம் செய்தல் | | திரு.கே.சேகர் | – | 1.00% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.02% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.எம்.சுருளி** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.484,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.14**

கூடலூர் நகராட்சியில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சிறப்பு திட்டமான அரசு பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயின்று வரும் பள்ளி குழந்தைகளுக்கு சாலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு பொது சமயற்கூடம் கட்டுவதற்கு ரூ.27.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தால் வழங்கப்பட்ட(TYPE DESIGN)மாதிரி வடிவமைப்பின்படி மதிப்பீடு தயார் செய்து பணிகள் மேற்கொள்ளபட்டது. மாதிரி வடிவமைப்பின்படி உள்ள மதிப்பீட்டில் குடிநீர் வசதி , SEPTIC TANK மற்றும் WASTE WATER செல்வதற்குரிய அமைப்புகள் அமைக்க வழிவகை செய்யபடவில்லை எனவே குடிநீர் வசதி ,செப்டிக் டேங்க் மற்றும் LEACH PIT ஆகிய பணிகள் கூடுதலாக மேற்கொள்ளபட வேண்டியுள்ளது. அதற்கான செலவினம் ரூ.2,15,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.485,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.15**

இந்நகராட்சி பொறியியல் பிரிவில் இயங்கி வரும் வாகனம் 2023–2024 ஆம் ஆண்டிற்கு செலுத்தவேண்டிய காப்பீட்டு பீரிமியத்தொகை செலுத்த வேண்டி **IFFCO-TOKI** பொது இன்சூரன்ஸ் கம்பெனி லிமிட்டேட் நிறுவனத்திலிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளதை தொடர்ந்து கீழ்கண்ட விவரம்படி காப்பீட்டு பீரிமியத்தொகை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ . எண் | வாகனஎண் மற்றும் பெயர் | பீரிமியத்தொகை: ரூ |
|---|---|---|
| 1 | TN 60 T 7332 ஈப்பு வாகனம் | **9377** |

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.486,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.16**

கூடலூர் நகராட்சி நடைபெற்று வரும் திட்டப்பணிகள் குறித்த விளம்பரத்தினை 2023 ஆம் ஆண்டு ஈராண்டு சாதனைகள் பற்றிய சிறப்பு மலரில் விளம்பரம் செய்வதற்கும் ,தேனி மாவட்ட

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட கீழ் காணும் நாளிதழ்களுக்கு உரிய விளம்பரக்கட்டணத் தொகையினை செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண். | பட்டியல் எண் மற்றும் நாள் | நாளிதழ் விபரம் | விளம்பர கட்டணம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | MD-23405011/03.06.2023 | தினமலர் | 12247/- |
| 2. | 2324DGL 231014811/ 03.06.2023 | தினதந்தி | 9933/- |
| 3. | TNI1305808/11.06.2023 | தினமணி | 10080/- |
| 5. | 3300424537/02.06.2023 | தினகரன் | 14700/- |
| | **மொத்தம்** | | **ரூ.46,960/-** |

**<u>அலுவலக குறிப்பு.</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.487,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.17**

கூடலூார் நகராட்சி வார்டு எண்-21,லோயர் கேம்பில் தலைமை நீரேற்று நிலைய வளாகத்தினுல் உள்ள குளோரினேசன் அறை மற்றும் பெரியாற்றின் அருகில் உள்ள மின் மோட்டார் அறையிலும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்திடவும் CCTV க்கான Display Unit அமைத்திடவும் உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.488,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.18**

நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை, அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14393/2022/மததி3, நாள்.14.06.2023 இல் தெரிவித்துள்ளபடி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் தென்மேற்கு பருவமலை முன்னெச்சரிக்கை தொடர்பான பணிகளான பொது மக்களுக்கு தொற்று பரவாமல் தடுத்தல், கழிவு நீர் கால்வாய்கள் சுத்தம் செய்யப்பட்டு கிருமிநாசினிகள் கொசுப்புழு ஒளிப்பு புச்சிகொள்ளி மருந்துகள் போன்ற வற்றை தெளிக்க தேவையான 6 எண்ணம் மருந்து தெளிக்கும் இயந்திரம் ( Hand Sprayer) வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.85000/–ற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.489,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.19**

நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை,அவர்களின் காணொலி ஆய்வுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் திடக்கழிவு மேலாண்மை பணியின் மூலமாக கேகாரம் ஆகும் மக்கும் மக்காத குப்பைகளை தினசரி எடையிட தேவையான எடை இயந்திரம் கீழ் கண்ட விவரப்படி 8 எண்ணம் வாங்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.95000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

நுண் உர செயலாக்க கூடம் –3 எண்ணம்
வளமீட்பு மையம் –2 எண்ணம்
வாகனங்களுக்கு –3 எண்ணம்

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.490,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.20**

கூடலூர் நகராட்சி பகுதியில் உள்ள தரை மட்ட மற்றும் மேல்நீர் தேக்க தொட்டி வளாகங்களை சுத்தம் செய்திட தேவையான PUSH CUTTER இயந்திரம், மண் வெட்டி ,கடப்பறை,மற்றும் அரிவாள் ஆகிய வாங்கி பயன்படுத்துவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.491,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.21**

நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை, அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.14393/2022/மததி3, நாள்.14.06.2023 இல் தெரிவித்துள்ளபடி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் தென்மேற்கு பருவமலை முன்னெச்சரிக்கை தொடர்பான பணிகளான ஓடைகள் மற்றும் கழிவுநீர் கால்வாய்களை சிறிய கிட்டாச்சி வாகனம் உதவியுடன் கழிவுநீர்கால்வாய்கள், மணல் அடைப்புகள்,புதர்களை சுத்தம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,50,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.492,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.22**

நகராட்சி நிர்வாக இயக்குனர் சென்னை,அவர்களின் காணொலி ஆய்வுக்கூட்ட நாள்.17.06.2023 இல் தெரிவித்துள்ளபடி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் KPI (Key Performance Indicator) முறையில் தனியார் மூலம் 01.06.2023 முதல் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால்,மேற்படி ஒப்பந்தபணி மேற்கொள்ளும் நிறுவனத்திற்க்கு கனரக வாகனம், இலகுரக வாகனம்,பேட்ரி வாகனம் மற்றும் தள்ளு வண்டிகள் போன்றவற்றை திடக்கழிவு மேலாண்மைக்கு ஒப்படைக்க வேண்டியுள்ளதால் மேற்கண்ட வானங்களில் தள்ளு வண்டி Puscard வாங்கி பத்து ஆண்டுகளுக்கு மேல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதால் வாகனங்களில் பழுதுகள் அதிகம் உள்ளதால் அதனை பயன்படுத்த முடியாத நிலையில் 15 எண்ணம் Puscard தள்ளுவண்டிக்கு மராமத்து பணிகன் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/– ற்க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது,

**அலுவலக குறிப்பு:-**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.493,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.23**

கூடலூர் நகராட்சியில் உள்ள பொது மயானத்தின் கிழக்கு மற்றும் வடக்கு பகுதியில் புதியதாக சுற்றுச்சுவர் அமைத்தல், வார்டு எண்-16, புதியதாக அமைக்கப்பட்டு வரும் வாரச்சந்தைக்கு நுழைவு வாயில் மற்றும் புதியதாக சுற்றுச்சுவர் அமைத்தல் மற்றும் புதிய வார்டு எண்-13/ பழைய வார்டு எண் -10ல் பெத்துக்குளத்தில் அமைக்கப்பட்டு வரும் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (FSTP) அணுகுசாலை மற்றும் புதியதாக தடுப்புச்சுவர் அமைக்க அரசு மூலதன நிதி (CGF) 2023–24–ன் கீழ் மதிப்பீடுகள் தயார் செய்து உரிய நிதி ஒதுக்கீடும் நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.494,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.24**

கூடலூர் நகராட்சியில் புதிதாக பூங்கா அமைக்க, சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் காணொலி வாயிலாக நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி நகர் ஊரமைப்பு இயக்குனர் அவர்களால் இந்நகராட்சி பகுதியில் அனுமதி வழங்கப்பட்ட புதிய மனைபிரிவில் உள்ள வரைபடத்தில் உள்ளபடி புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆனந்த பசுமை நகர் மனைப்பிரிவில் பூங்கா அமைப்பதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இடத்தில் சுற்றுச்சுவர் அமைக்க ரூ.40.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மதிப்பீட்டிற்கு உரிய நிர்வாக அனுமதி வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர்,அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.495,அனுமதிக்கப்பட்டது.**

**பொருள்.25**

கூடலூர் நகராட்சி வார்டு எண்-10 பெத்துகுளத்தில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் சமூக விரோத செயல்கள் நடைபெறாமல் தடுக்கும் பொருட்டும் மற்றும் குப்பைகளில் தீ வைத்தல் போன்ற நிகழ்வுகளை தடுக்கும் பொருட்டும் உரக்கிடங்கின் வடபுறம் முள்வேலி,முகப்பு கதவு அமைத்து கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துவதற்கு உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.3,20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.496,அனுமதிக்கப்பட்டது.**

**(ஒம்/–)லோ.பத்மாவதி**
**நகர்மன்றத்தலைவர்**
**கூடலூர் நகராட்சி**